<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>
**<u>MCOP. No. 292/2019</u>**

எ.ம.சா.2 தேதி. 25.09.2025

| | | | |
|---|---|---|---|
| பெயர் | Dr.ஜமுனா | த/பெ, | கோதண்டபாணி |
| வயது | | தொழில் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பு

<u>முதல் விசாரணை:-</u>

நான் தற்போது திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2021 ஆம் ஆண்டில் மயிலாடுதுறை அரசு பெரியார் பொது மருத்துவமனையில் பணிபுரிந்தேன். நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை பெற்று அதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற ஆவணத்தில் மனுதாரருக்கு ஊனச்சான்றினை வழங்கியுள்ள குழுமத்தில் நானும் உறுப்பினராக இருந்து சான்று வழங்கியுள்ளேன். ஊனச்சான்றிதழில் என்னென்ன காரணத்திற்காக தனித்தனியாக சதவீதம் குறிப்பிடாமல் 60 சதவீதம் வழங்கப்பட்டுள்ளது என்றால் நான் எலும்பு முறிவு மருத்துவர் அல்ல. அந்த மருத்துவ குழுவில் நான் 2 வது உறுப்பினராக நான் கையொப்பம் இட்டுள்ளேன். அரசு ஆணையின் படி எவ்வாறு ஊனத்தின் சதவீதம் கணக்கிடப்படவேண்டுமோ அதன் அடிப்படையில் தான் கணக்கிடப்பட்டு ஊனத்தின் சதவீதம் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக எலும்பு முறிவு சம்பந்தமாக குறிப்பிட்ட கருத்து தெரிவிக்க வேண்டும் என்றால் இந்த மருத்துவக்குழுவில் உள்ள எலும்பு முறிவு மருத்துவர் தான் தெரிவிக்க முடியும். அவர் தற்போது இறந்துவிட்டார். நான் எலும்பு முறிவு மருத்துவர் இல்லை என்பதால் இதில் குறிப்பிடப்பட்டள்ள 60 சதவீதம் எதன் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. எங்கள் மருத்துவ குழுவில் கலந்து ஆலோசித்துதான் இதில் முடிவு எடுக்கப்பட்டு சதவீதம் குறிப்பிடப்படும். மனுதாரருக்கு அளிக்கப்பட்டுள்ள ஊனசதவீதம் மிகைப்படுத்தி அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஊனச்சான்றிதழில் தற்காலிக ஊனமா, நிரந்தர ஊனமா என்று காட்டப்படவில்லை என்றால் சரிதான்.

அதுபோல் அந்த சான்றில் 3 வது காலத்தில் காயமுற்றவரின் தன்மை குறித்து குறிப்பு குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

ஊனச்சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள இடது கால் மூட்டுக்கு கீழ் கால் நீக்கப்பட்டுள்ளது (Ambutation) கால் நீக்கப்பட்டிருந்தாலே அது நிரந்தர ஊனம் தான். நிரந்தர ஊனம் என்றாலே அரசு ஆணையின் படி இந்த காயத்திற்கு எத்தனை சதவீதம் கொடுக்கப்பட்டவேண்டும் என்றால் 60 சதவீதம் கொடுக்கப்படவேண்டும். Ambutation என்று குறிப்பிட்டால் முதல் விசாரணையில் குறிப்பிட்டள்ள காலம் 3 ன் படி அதன் தன்மை முன்னேற்றம் அடைவதற்காக வாய்ப்பு என்பதே இல்லை. மருத்துவ குழுவில் மனுதாரரின் ஊனம் குறித்து குழுவில் உள்ள எலும்பு முறிவு மருத்துவர் குழுவில் உள்ள மற்ற மருத்துவராகிய என்னிடமும், மற்ற மருத்துவரிடமும் தன்மை குறித்து விளக்கி அதன் பின்னர் தான் ஊனம் கணக்கிடப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ளது. இது தனி நபரால் வழங்கப்பட்ட கருத்து இல்லை என்றாலும் இது மருத்துவ குழுவால் கலந்து ஆலோசிக்கப்பட்டு முடிவு கருத்து என்றாலும் சரிதான்.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.